# உபசரிப்பின் ரகசியம்

**கொஞ்சம் தண்ணீர் கொண்டுவரட்டும், உங்கள் கால்களைக் கழுவி, மரத்தடியில் சாய்ந்துகொண்டிருங்கள். நீங்கள் உங்கள் இருதயங்களைத் திடப்படுத்தக் கொஞ்சம் அப்பம் கொண்டுவருகிறேன்; அப்புறம் நீங்கள் உங்கள் வழியே போகலாம்; இதற்காகவே அடியேன் இடம்வரைக்கும் வந்தீர்கள் என்றான். அதற்கு அவர்கள்: நீ சொன்னபடி செய் என்றார்கள். (ஆதி 18:4,5)**

அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்; அதினாலே சிலர் அறியாமல் தேவதூதரையும் உபசரித்ததுண்டு (எபி. 13:2) என்று நடந்ததை மனதிற்கொண்டு நமக்கும் ஞாபகமூட்டுகின்றார் எபிரெய ஆக்கியோன். மம்ரேயின் சமபூமியில் மூன்று புருஷர்களை ஆபிரகாம் சந்தித்தபோது, உபசரிப்பின் சிந்தை ஆபிரகாமின் உள்ளத்தில் உருவெடுத்தது. பகலின் உஷ்ணமான வேளையில் ஆண்டவரைச் சந்தித்ததும், **அவரிடமிருந்து எதைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அல்ல, அவருக்கு எதைக் கொடுக்கலாம் என்றே எண்ணினான் ஆபிரகாம்**. ஆண்டவரைச் சந்திக்கும்போது, அவரது விருப்பங்களையும் மற்றும் தேவைகளையும் குறித்து பல வேளைகளில் நாம் சிந்திக்கிறதில்லை; மாறாக, நம்முடைய தேவைகளையே அவரிடத்தில் முன்நிறுத்திக்கொண்டிருக்கின்றோம்; விளைவு, அவரை வெறுங்கையாகவே அனுப்பிவிடுகிறோம். **ஆண்டவரைச் சந்திக்கும்போது, அவருடைய தேவைகளே நமது கண்களுக்கு முன் நிற்கட்டும்**.

இயேசு சீஷர்களை நோக்கி, “பந்தியிருக்கிறவனோ, பணிவிடை செய்கிறவனோ, எவன் பெரியவன்? பந்தியிருக்கிறவன் அல்லவா? அப்படியிருந்தும், நான் உங்கள் நடுவிலே பணிவிடைக்காரனைப்போல் இருக்கிறேன்” (லூக் 22:27) என்று **உபசரிக்கும் நிலையில் தான் இருப்பதையே** உணர்த்துகின்றார். நம்மை முந்தி திருப்தியடையச் செய்கிறவர் அவர்; என்றாலும், **"முந்திப் பிள்ளைகள் திருப்தியடையட்டும்"** (மாற் 7:27) என்ற சத்தியத்தையே மனதில் கொண்டவர்களாக, அவரை திருப்திப்படுத்தும் காரியங்களைச் செய்ய நாம் மறந்துவிடக்கூடாது.

இயேசு காட்டிக்கொடுக்கப்படும் வேளை வந்தபோது, சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்து அவரைக் காட்டிக்கொடுக்கும்படி பிசாசானவன் அவன் இருதயத்தைத் தூண்டினபின்பு, அவர்கள் **போஜனம் பண்ணிக்கொண்டிருக்கையில்**; தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்தாரென்பதையும், தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும், தேவனிடத்திற்குப் போகிறதையும் இயேசு அறிந்து; **போஜனத்தை விட்டெழுந்து**, வஸ்திரங்களைக் கழற்றிவைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டு, பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, **சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார்**. (யோவா 13:3-5)

கால்களை **அவர்களே கழுவிக்கொள்ளும்படியாக தண்ணீர்கொண்டுவந்து கொடுத்தான்** ஆபிரகாம்; இயேசுவோ, வஸ்திரங்களைக் கழற்றிவைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டு, பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார் (யோவா 13:4,5). **"தண்ணீர் கொண்டுவந்து சீஷர்களுடைய கால்களைக் தாமே கழுவினார் இயேசு." ஆபிரகாம் கால்களைச் கழுவச்சொல்லிவிட்டு போஜனம் கொடுத்தான்; ஆனால் இயேசுவோ, தான் "போஜனம்பண்ணிக்கொண்டிருக்கும்போது, போஜனத்தை விட்டெழுந்து கால்களைக் கழுவினார்."** மேலும், "அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" (மத் 20:28) என்று, **சரீரத்தைக் கழுவுவதோடு மாத்திரம் தன் பணிவிடையை நிறுத்திக்கொள்ளாமல், இரத்தத்தினால் ஆத்துமாவையும் கழுவும் பணிவிடையையும் தான் செய்யவிருப்பதை இயேசு கிறிஸ்து வெளிப்படுத்துகின்றார்**.

ஆபிரகாமின் உபசரிப்பு, ஆண்டவரை சற்று தரித்திருக்கச் செய்தது; ஆனால், சோதோமின் அழிவைத் தடுத்து நிறுத்தவில்லை; அனால், இயேசு கிறிஸ்துவோ தனது மாம்சத்தையும் இரத்தத்தையும் கொடுத்து அழிவிலிருந்து ஜனங்களை பாதுகாத்தார். இந்த உபசரிப்பை சுவிசேஷமாக அறிவிப்பது நமது பொறுப்பல்லவோ. வருகையிலே வெறுங்கையனாக அவரைச் சந்திக்கும் நிலை நமக்கு உண்டாகிவிடக்கூடாது. ஆண்டவரை உபசரிப்பதுடன், **அவரை அறிவிப்பதே, பிறரது ஆத்துமாக்களுக்கு அவரை ஆகாரமாக்கும்**.